## ஆலந்தூர், அசோக்நகர்

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

சென்னை, மார்ச்.2–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், ஆலந்தூர் ரோட்டரி சங்கம் மற்றும் எஸ்.ஆர்.எம். மருத்துவமனை குழுமம் சார்பில் ஆலந்தூர் மற்றும் அசோக்நகர் மெட்ரோ ரெயில் நிலையங்களில் 2 நாட்கள் பொதுமருத்துவம் மற்றும் பல் பரிசோதனை முகாம் நடந்தது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு பல், ரத்த கொதிப்பு, சர்க்கரை அளவு, இதய நோய் உள்ளிட்ட பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்டன. ராமாபுரம் எஸ்.ஆர்.எம். மருத்துவமனை மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர்.

இதில் பயணிகள், ரெயில் நிறுவன ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 435 பேர் பங்கேற்று பலன் அடைந்தனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.